19வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு

19-வது பிரவாசி பாரதிய திவாஸ் (பிபிடி) மாநாட்டிற்கான இணையதளத்தை (pbdindia.gov.in), மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் மேற்கு வங்க முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி ஆகியோர் இணைந்து, 2026-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதியன்று புது தில்லியில் தொடங்கி வைத்தனர். 19வது பிபிடி மாநாடு மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் 2027 ஜனவரி 7–9 வரை மேற்கு வங்க அரசாங்கத்துடன் இணைந்து நடைபெறும்.

2. பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு இந்திய அரசாங்கத்தின் ஒரு முதன்மையான நிகழ்வாகும்; இது உலகம் முழுவதும் பரவியுள்ள இந்திய வம்சாவளியினருடன் தொடர்புகொள்வதற்கான ஒரு முக்கியமான தளத்தை வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 9-ஆம் தேதி கொண்டாடப்படும் பிரவாசி பாரதிய திவாஸ், 1915-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதை நினைவுகூருகிறது. 19வது பிபிடி மாநாடு உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த இந்திய உறுப்பினர்களை ஒன்றிணைத்து அவர்களின் சாதனைகளைக் கொண்டாடவும், இந்தியாவுடனான அவர்களின் உறவுகளை வலுப்படுத்தவும் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கான அவர்களின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் பங்களிப்பிற்கான வழிகளை ஆராயும்.

3. 19வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டின் கருப்பொருளான, 'வேர்களுக்குத் திரும்புதல்: இந்திய வம்சாவளியினருக்கும் பாரதத்திற்கும் இடையிலான உறவை மீண்டும் வலுப்படுத்துதல்' என்பது, இந்திய வம்சாவளியினர் தங்களது தாய்நாட்டுடன் கொண்டுள்ள ஆழமான நாகரிக, கலாச்சார மற்றும் உணர்வுப்பூர்வமான பிணைப்புகளைக் கொண்டாடுகிறது. மேலும், காலத்தால் அழியாத இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் அடுத்த தலைமுறையினர் தங்கள் வேர்களை மீண்டும் கண்டறியவும், பாரதத்துடன் மீண்டும் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும், சமகால இந்தியாவுடனான தங்கள்

ஈடுபாட்டை ஆழப்படுத்திக்கொள்ளவும் அர்த்தமுள்ள வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

4. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு, யூத் பிரவாசி பாரதிய திவாஸ் நிகழ்வுடன் தொடங்கும். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைக்கவுள்ளார். மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கி, மதிப்புமிக்க பிரவாசி பாரதிய சம்மான் விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார். இந்த விருதுகள், இந்திய வம்சாவளியினர் அவரவர் துறைகளில் ஆற்றியுள்ள சிறப்புமிக்க பங்களிப்புகளையும், உலக நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்துவதில் அவர்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கினையும் அங்கீகரித்துப் பாராட்டி வழங்கப்படுகின்றன.

5. பிபிடி இணையதளத்துடன் இணைந்து, பாரத் கோ ஜானியே (பிகேஜே), அதாவது பாரதத்தை அறிந்துகொள்வோம் என்கிற சிறப்பு வினாடி வினா நிகழ்ச்சியும் தொடங்கி வைக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட இந்த வினாடி வினா, சமீபத்திய விளையாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, புலம்பெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டினர் மத்தியில் தனது பரவலை விரிவுபடுத்துவதோடு, பங்கேற்பாளர்களை இந்தியாவின் பாரம்பரியம், கலாச்சாரம், கலை மற்றும் சமகால சாதனைகளுடன் இணைக்கிறது. பிகேஜே வினாடி வினா நிகழ்ச்சியானது, பாரத்வெர்ஸ் செயலி மற்றும் இணையதளத்தில் (www.bkjquiz.com) கிடைக்கிறது, இது "எப்போதும், 24x7 நேரமும்" செயல்படும் டிஜிட்டல் பொதுமக்கள் தூதரகத் தொடர்புத் தளமாகும். இதில் வினாடி வினா, புதிர்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், சொல் தேடல், விடையைக் கண்டறியும் விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. பிபிடி சிறப்பு வினாடி வினா நவம்பர் 11 முதல் டிசம்பர் 20, 2026 வரை நடைபெறும். வெற்றியாளர்கள் மூன்று பிரிவுகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், அவை - வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் (என்ஆர்ஜ-கள்), இந்திய வம்சாவளியினர் (பிஐஓ-கள்) மற்றும் வெளிநாட்டினர் ஆகியவையாகும். இதில் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்கள், இந்தியாவின் பல்வேறு சிறப்புகளையும் அனுபவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் 10

நாள் சிறப்புச் சுற்றுப்பயணத்திற்கு அழைக்கப்படுவார்கள், மேலும், கொல்கத்தாவில் நடைபெறும் பிபிடி கொண்டாட்டங்களிலும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

6. பிபிடி இணையதளத்தின் (pbdindia.gov.in) தொடக்கம் இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கான ஆன்லைன் பதிவுகள் தொடங்குவதைக் குறிக்கிறது. இந்த இணையதளம், பங்கேற்க விரும்பும் நபர்களுக்கு ஒரு முழுமையான தகவல் மற்றும் வசதி மையமாகச் செயல்படும். இதில் மாநாடு குறித்த விவரங்கள், அதன் நிகழ்ச்சி நிரல், பதிவு நடைமுறைகள், தங்குமிட வசதிகள், போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் பங்கேற்பிற்குத் தேவையான பிற முக்கிய அம்சங்கள் குறித்த தகவல்கள் இடம்பெறும்.

புது தில்லி

நவம்பர் 11, 2026